




தமிழ் மொழியை காப்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 62 நாட்கள் தனிமைச் சிறையில் இருந்த பாளையங்கோட்டை அமைந்துள்ள நெல்லை மாவட்டத்தின் கழக மூத்த முன்னோடிகள் 1062 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் பொற்கிழியை நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். விழாவினை சிறப்புற ஒருங்கிணைத்த நெல்லை கிழக்கு – மத்திய மாவட்ட கழகத்தினருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்த இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர்கள், கழக முன்னணியினர் பங்கேற்றனர்.